<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.</u>

2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ம் நாள் திங்கட் கிழமை.

1873ம் ஆண்டு 10ஆவது ஏற்பாட்டின்படி திரு. பி.பாலாஜி, இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

அசல் வழக்கு எண். 508/2018 (பழைய எண்.397/2010) என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. மணி | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

22.10.2018 வா.சா.1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். 10.6.1987 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.1. 9.3.1970 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.2. 4.7.1974 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.3. 14.3.1975 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.4. 7.2.1979 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.5. 24.8.1989 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை அசல் வா.சா.ஆ.6. 16.12.1992 தேதியிட்ட கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.7. தாவா சொத்திற்கு வழங்கப்பட்டுள்ள சிட்டாக்கள் எண்ணிக்கை 4 வா.சா.ஆ.8 வரிசை. தாவா சொத்திற்கான 1420 பசலிக்கான அடங்கல் பதிவேட்டு நகல் வா.சா.ஆ.9. தாவா சொத்திற்கான தீர்வை ரசீதுகள் எண்ணிக்கை 7 வா.சா.ஆ.10 வரிசை. 27.4.1995 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட பதிவு நகல் வா.சா.ஆ.11. மேற்படி வா.சா.ஆ.1 முதல்

11 ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/ வே.ஜெகன்னாதன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போளூர்.